BMW GROUP
India

Media Information(Tamil)
13 January 2024

**உற்சாகம் அதிகரிக்கட்டும்: BMW கோல்ஃப் கப் 2024 இந்தியாவில் தொடங்குகிறது.**

**அமெச்சூர் கோல்ஃபர்களுக்கான மிகப்பெரிய சர்வதேச போட்டித் தொடர்.**

**இந்தியா முழுவதும் உள்ள சிறந்த கோல்ஃப் கோர்ஸ்களில் 9 நகரங்களில் 15 கோல்ஃப் போட்டிகள்.**

#BMWGolfCup2024 #DrivenByPassion #BMWGolfSport #BMWIndia #SheerDrivingPleasure

**குருகிராம்**. BMW இந்தியா, மிகப்பெரிய அமெச்சூர் கோல்ஃப் போட்டியின் இந்திய பதிப்பான BMW கோல்ஃப் கப் 2024-ஐ இன்று சென்னையில் தொடங்குகிறது. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட கோல்ஃப் போட்டிகள் சென்னை, பெங்களூரு, ஹைதராபாத், புனே, மும்பை, அகமதாபாத், நொய்டா, கொல்கத்தா மற்றும் குர்கான் ஆகிய இடங்களில் உள்ள கண்கவர் கோல்ஃப் மைதானங்களில் நடைபெறும். பிராந்திய போட்டிகளில் வெற்றி பெறுபவர்கள் 2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நடைபெறும் நேஷனல் பைனல்ஸில் மோதுவார்கள்.

உலகின் மிகப்பெரிய அமெச்சூர் கோல்ஃப் போட்டித் தொடரில் ஒன்றான BMW கோல்ஃப் கப்-இன் வேர்களை கால் நூற்றாண்டிற்கு முந்தைய, இங்கிலாந்தை அடிப்படையாகக் கொண்டதொரு முன்முயற்சியில் கண்டறிய முடியும். அது சர்வதேச நிலைக்குச் செல்வதற்கு முன்பு ஐந்து ஆண்டுகள் உள்நாட்டு அளவில் இயங்கியது. UK -இல் BMW அழைக்கப்படுவோர் மட்டும் பங்கேற்கும் போட்டியாக இந்தப் போட்டி தொடங்கியது. இது தற்போது 50 நாடுகளில் இருந்து வரை 100,000 வீரர்கள் பங்கேற்கும் 1,000 தகுதிப் போட்டிகள் கொண்ட உலகளாவிய தொடராக உருவாகியுள்ளது. ஒவ்வொரு நாட்டிலிருந்தும் சிறந்த வீரர்கள், BMW கோல்ஃப் கப் வேர்ல்ட் பைனலுக்கு தகுதி பெறுகின்றனர்.

BMW குரூப் இந்தியாவின் பிரசிடெண்ட் மிஸ்டர். விக்ரம் பவாஹ் கூறுகையில், "BMW குரூப் இந்தியா தொடர்ந்து கோல்ஃப் விளையாட்டிற்கு ஆதரவு தருகிறது. நாட்டில் அடிமட்டத்திலிருந்து தொழில்முறை நிலை வரை அதனை வளர்த்தெடுத்து வருகிறது. BMW கோல்ஃப் கப் ஒவ்வொரு அம்சத்திலும் ஒரு முன்மாதிரியான போட்டியாக உள்ளது. ஒரு விதிவிலக்கான தளத்தை வழங்குவதன் மூலம், அமெச்சூர் கோல்ப் வீரர்கள் நாட்டிலுள்ள சில சிறந்த கோல்ஃப் மைதானங்களின் வியக்க வைக்கக்கூடிய அமைப்புகளுக்கு

மத்தியில் தங்கள் திறமைகளை செம்மைப்படுத்தவும் வெளிப்படுத்தவும் அனுமதிக்கிறது. சந்தேகத்திற்கு இடமின்றி, BMW கோல்ஃப் கப் ஆண்டின் முக்கிய சிறப்பம்சமாகவும், ஒவ்வொரு ஆண்டும் அமெச்சூர் கோல்ஃபர்கள் வெல்ல விரும்பும் பட்டமாகவும் உள்ளது." என்று தெரிவித்தார்.

பிரத்தியேகமான, அழைப்போர் மட்டுமே பங்குபெறும் நிகழ்வான, BMW கோல்ஃப் கப் 2024-ல் நாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட கோல்ஃப் கிளப்ஸில் உறுப்பினர்களாக இருக்கும் கோல்ஃபர்கள் பங்குபெறலாம். அந்தந்த உள்ளூர் கோல்ஃப் கிளப்பின் விதிகளின்படி போட்டிகள் நடத்தப்படுகின்றன. ஒரு விசுவாசத் திட்டமான இது , BMW வாடிக்கையாளர்களுக்கு உலகின் மிகப்பெரிய அமெச்சூர் கோல்ஃப் போட்டிகளுக்குத் தகுதிபெறும் வாய்ப்பை வழங்குகிறது. BMW இந்தியா டீலர்கள் BMW உரிமையாளர்களிடையே இந்தப் போட்டியில் பங்கேற்க ஆர்வமாக உள்ள அமெச்சூர் கோல்ஃபர்களை அடையாளம் காண்பர்.

100,000 வீரர்கள் பங்கேற்கும் 1,000 தகுதிப் போட்டிகளைக் கொண்ட உலகளாவிய தொடரான BMW கோல்ஃப் கப் 2024 வேர்ல்ட் பைனலில் பங்கேற்கும் 50 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். BMW கோல்ஃப் கப் வாடிக்கையாளர்கள், வாடிக்கையாளராக வாய்ப்பு உள்ளோர் மற்றும் ஊடகங்களில் அதிக கவனம் பெறுவோருக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு அமெச்சூர் கோல்ஃப் போட்டித் தொடராகும். மேலும் இது ஒரு பிரத்யேக சமூகத் தொடர்புக்கான சரியான கலவையை வழங்குகிறது.

BMW கோல்ஃப் கப் A (12 வயது வரையிலான ஹாண்டிகேப்ஸ்களுக்கு), B (ஹாண்டிகேப்ஸ்களுக்கு 13 - 28) மற்றும் லேடீஸ் கேட்டகிரி (28 வரையிலான ஹாண்டிகேப்ஸ்களுக்கு) ஆகிய மூன்று பிரிவுகள் உள்ளன. தனிநபர் ஹாண்டிகேப் பிரிவுகளில் வெற்றி பெற்றவர்கள், இரண்டாம் இடம் பெற்றவர்கள் மற்றும் மூன்றாம் இடம் பிடித்தவர்கள் நேஷனல் பைனல்ஸ்க்கு தகுதி பெறுவார்கள். நேஷனல் பைனல்ஸில் மூன்று ஹாண்டிகேப்ஸ் பிரிவுகளில் வெற்றி பெறுபவர்கள் BMW கோல்ஃப் கப்பின் வேர்ல்ட் பைனல்ஸில் பங்கேற்க தகுதி பெறுகின்றனர்.

BMW GROUP
India

If you have any queries, please contact:

**BMW Group India**

Abhay Dange, Director, Press and Corporate Affairs
Cell: +91 9910481013; Tel: + 91 124 4566600; Email: Abhay.Dange@bmw.in

Satchit Gayakwad, Press and Corporate Affairs
Cell: +91 9560725900; Tel: + 91 124 4566906; Email: Satchit.Gayakwad@bmw.in

Internet: www.bmw.in
Facebook: https://www.facebook.com/bmwindia
Twitter: https://twitter.com/bmwindia
YouTube: https://www.youtube.com/user/bmwindia
Instagram: https://www.instagram.com/bmwindia_official

#BMW #BMWIndia #SheerDrivingPleasure